கோவை, நீலகிரி மாவட்டங்களில் 24 மணி நேரத்துக்குள் இயல்பு வாழ்க்கை திரும்பும்

ஆ.ராசா எம்.பி.

மேட்டுப்பாளையம், மே 27: கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்துக்குள் இயல்பு வாழ்க்கை திரும்ப அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை எடுத்து வருவதாக நீலகிரி எம்.பி. ஆ.ராசா தெரிவித்தார்.

கேரளம் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக பில்லூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து 2-ஆவது நாளாக 97 அடியாக உள்ளது. செவ்வாய்க்கிழமை அணைக்கு விநாடிக்கு 10,500 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இதையடுத்து, அணைக்கு வரும் 3 ஷட்டர்கள் வழியாக விநாடிக்கு 6,000 கன அடி மற்றும் மின் உற்பத்திக்காக விநாடிக்கு 4,500 கனஅடி தண்ணீர் என மொத்தம் 10,500 கன அடி தண்ணீர் பவானி ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ளது. இதனால் பவானி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஆற்றின் கரையோரம் வசிக்கும் மக்களுக்கு 2-ஆவது நாளாக வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

மேட்டுப்பாளையம் பவானி ஆற்றில் செல்லும் தண்ணீரை பார்வையிடுகிறார் நீலகிரி எம்.பி. ஆ.ராசா.

இந்த நிலையில், மேட்டுப்பாளையம் பவானி ஆற்றுப் பாலத்தில் நீலகிரி எம்.பி. ஆ.ராசா செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டார். அப்போது அதிகாரிகளிடம் பவானி ஆற்றுக்கு வரும் நீரின் அளவு, வெளியேறும் நீரின் அளவு, நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் மழை அளவு, எடுக்கப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடந்த சில தினங்களாக கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் பெய்து வரும் தொடர் கனமழையையொட்டி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், சட்டப் பேரவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள் நேரில் சென்று மழை வெள்ள பாதிப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்து நிவாரணம் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

கரையோர பகுதியில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்து அவர்களுக்கு தேவையான உணவுப் பொருள்களை மாவட்ட நிர்வாகம் வழங்கி வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் கனமழையால் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை உடனடியாக வழங்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோவை மற்றும் நீலகிரி மாவட்ட ஆட்சியர்கள் மழைக் கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையை சிறப்பாக முடுக்கி விட்டுள்ளனர். அடுத்த 24 மணி நேரத்துக்குள் இயல்பு வாழ்க்கை திரும்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

ஆய்வின்போது, மேட்டுப்பாளையம்வட்டாட்சியர்ராமராஜ், நகராட்சி ஆணையர் அமுதா, முன்னாள் எம்.எல்.ஏ-க்கள் பா.அருண்குமார், சி.ஆர்.ராமச்சந்திரன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் அஷ்ரப் அலி, நகர்மன்றத் தலைவர் மெஹரீபா பர்வின், கூடலூர் நகராட்சித் தலைவர் அறிவரசு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

ஆர்ப்பரித்து கொட்டும் தண்ணீர்...

வால்பாறை மற்றும் கேரள மாநில எல்லைப் பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வரும் நிலையில், வால்பாறையை அடுத்த கேரள மாநிலத்தின் முக்கிய சுற்றுலாத் தலமான அதிரப்பள்ளி அருவியில் ஆர்ப்பரித்து கொட்டும் தண்ணீர்.

போக்குவரத்து பாதிப்பு

வால்பாறை வட்டாரத்தில் பலத்த காற்றுடன் கனமழை பெய்து வரும் நிலையில் வால்பாறை- பொள்ளாச்சி சாலை அட்டகட்டி 6-ஆவது கொண்டை ஊசி வளைவில் விழுந்த பெரிய மரத்தை அப்புறப்படுத்தும் பணியில் செவ்வாய்க்கிழமை ஈடுபட்ட நெடுஞ்சாலைத் துறையினர். இதனால் அப்பகுதியில் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

உலக புகையிலை ஒழிப்பு தினப் போட்டிகள்

ஆட்சியர் தொடங்கிவைத்தார்

கோவை, மே 27: போதை இல்லா தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் கோவையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உலக புகையிலை ஒழிப்பு தினப் போட்டிகளை ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் தொடங்கிவைத்தார்.

உலக புகையிலை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கவிதை, ஓவியம், விழிப்புணர்வு வாசகங்கள் எழுதுதல் போன்ற பல்வேறு போட்டிகள் கோவை பெரியகுளம் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி அனுபவ மையத்தில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளை ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் போதைப்பொருள் விழிப்புணர்வுக்காக பல்வேறு வண்ண பலூன்கள் பறக்கவிடப்பட்டன. நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் க.கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன், மாநகர காவல் துணை ஆணையர் உதயகுமார், கலால் துணை ஆணையர் பழனிகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கோவையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உலக புகையிலை ஒழிப்பு தின போட்டி தொடக்க விழாவில் விழிப்புணர்வுக்காக பல்வேறு வண்ண பலூன்களை பறக்கவிடும் மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் உள்ளிட்டோர்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பேசும்போது, உலக புகையிலை ஒழிப்பு தினம் ஆண்டுதோறும் மே 31-ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. போதை இல்லா தமிழ்நாட்டை உருவாக்கிடும் வகையில், உலக புகையிலை ஒழிப்பு தினத்துக்காக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

போதைப் பழக்கம் இளம் தலைமுறையை பாதித்து வரும் தீவிரமான பிரச்னை ஆகும். இதைத் தடுக்கும் நோக்கிலும் 9 முதல் 12-ஆம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவ, மாணவிகள், அனைத்து கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் போட்டிகள் நடத்தப்படுகின்றன. போட்டியில் வெற்றிபெறும் மாணவ,மாணவிகளுக்குவரும்31-ஆம் தேதி நடைபெற உள்ள உலக புகையிலை ஒழிப்பு தின விழாவில் பரிசுகள் வழங்கப்படும் என்றார்.

அரசு மருத்துவமனையில் உயிரிழந்தவரின் தாலியைத் திருடியவர் கைது

கோவை, மே 27: கோவை அரசு மருத்துவமனையில் உயிரிழந்த பெண்ணின் தாலியைத் திருடியவரை போலீஸார் கைது செய்தனர்.

கோவை அரசு மருத்துவமனையில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து தினமும் ஏராளமானோர் சிகிச்சைக்கு வந்து செல்கின்றனர். உள்நோயாளிகளாகவும் பலர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், கோவை பாப்பநாயக்கன்பாளையத்தைச் சேர்ந்த செல்வி என்பவரின் தாயார் உடல் நலக் குறைவால் கடந்த 20-ஆம் தேதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். இதற்கிடையில் செல்வியின் தாயார் 21-ஆம் தேதி உயிரிழந்தார். அப்போது, அவரது தாயார் அணிந்திருந்த 6 கிராம் தங்கத் தாலி மாயமானது தெரியவந்தது.

இதுகுறித்து, செல்வி அளித்த புகாரின்பேரில் ரேஸ்கோர்ஸ் போலீஸார் வழக்குப்பதிந்துவிசாரணை மேற்கொண்டனர். அதில், மருத்துவமனையில் ஊழியராகப் பணியாற்றி வரும் செல்வபுரம் அருகே உள்ள குமாரபாளையம் அமுல் நகரைச் சேர்ந்த ராஜசேகர் (35) என்பவர் உயிரிழந்த பெண்ணின் தாலியைத் திருடியது தெரியவந்தது. இதையடுத்து, போலீஸார் அவரைக் கைது செய்தனர்.

தென்மேற்குப் பருவமழை

தமிழ்நாட்டில் சராசரி அளவிலேயே பொழியும்: வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, மே 27: தமிழ்நாட்டில் இந்த ஆண்டில் தென்மேற்குப் பருவமழை சராசரி அளவிலேயே பொழியும் என்று எதிர்பார்ப்பதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பல்கலைக்கழகம் மேலும் கூறியிருப்பதாவது:

2025-ஆம் ஆண்டின் தென்மேற்குப் பருவமழைக் காலத்துக்கான (ஜூன் - செப்டம்பர்) முன்னறிவிப்பு செய்வதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் கால நிலை ஆராய்ச்சி மையம், பயிர் மேலாண்மை இயக்ககத்தில் ஆய்வு நடத்தியது.

இதற்காக மார்ச், ஏப்ரல் மாதங்களில் பசிபிக் பெருங்கடலில் பூமத்திய ரேகையை ஒட்டியுள்ள கடற்பகுதியின் மேற்பரப்பு நீரின் வெப்பநிலை, தென்மண்டல காற்றழுத்தக் குறியீடு ஆகியவற்றை உபயோகித்து ஆஸ்திரேலிய நாட்டில் இருந்து பெறப்பட்ட மழை மனிதன் என்ற கணினி கட்டமைப்பைக் கொண்டு பருவமழை முன்னறிவிப்பு பெறப்பட்டது.

இதில், கோவை, திருப்பூர், கன்னியாகுமரி, நாமக்கல், கரூர், தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் சராசரிக்கு ஒட்டிய மழையும் மற்ற மாவட்டங்களில் சராசரி மழை அளவும் எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் இந்த ஆண்டு 12 சதவீதமும், திருப்பூரில் 14 சதவீதமும் குறைவாகப் பெய்யும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

வீட்டின் பூட்டை உடைத்து 18 பவுன் திருட்டு

கோவை, மே 27: கோவை சிங்காநல்லூர் அருகே இருகூரில் வீட்டின் பூட்டை உடைத்து 18 பவுன் நகைகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

கோவை சிங்காநல்லூர் அருகே இருகூர் மகாகவி நகர் பகுதியைச் சேர்ந்தவர் கபிலன்(29). இவர், வீட்டைப் பூட்டிவிட்டு, குடும்பத்தினருடன் அருகில் இருந்த தேவாலயத்துக்கு ஞாயிற்றுக்கிழமை சென்றார். பின்னர் திரும்பி வந்து பார்த்தபோது, வீட்டின் பின்பக்கக் கதவின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது.

இதையடுத்து, வீட்டுக்குள் சென்று பார்த்தபோது, பீரோவில் வைக்கப்பட்டு இருந்த 18 பவுன் நகைகள் மற்றும் வெள்ளிக் கொலுசு திருடு போனது தெரியவந்தது. இதுதொடர்பாக, கபிலன் அளித்த புகாரின்பேரில், சிங்காநல்லூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

சாய்ந்த மரம்...

கோவையில் தொடர் மழை பெய்து வரும் நிலையில், ஆட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை வேரோடு சரிந்த 20 ஆண்டுகள் பழைமையான மே ஃபிளவர் மரம்.

HIGHER EDUCATION COMMISSION, JESUIT CHENNAI PROVINCE
VACANCIES FOR THE ACADEMIC YEAR 2025-2026

Name of the Jesuit College	Position and Description
Loyola-ICAM College of Engineering and Technology (LICET), Chennai	Posts : • Principal • Admin Officer Qualifications required : As per AICTE Norms

For Application and further details, refer www.jesuitchennaihighereducation.com

PROVINCE COORDINATOR FOR HIGHER EDUCATION,
JESUIT CHENNAI PROVINCE

IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்
IDFC FIRST Bank
(முந்தைய கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெட், பிறகு IDFC பேங்க் லிமிடெட் - உடன் இணைக்கப்பட்டது)
CIN: L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம்: KRM டவர்ஸ், 8 வது தளம், ஹாரிங்டன் சாலை, சேட்பட், சென்னை – 600 031
தொலைபேசி - +91 44 4564 4000 / தொலைநகல் - +91 44 4564 4022

பிற்சேர்க்கை IV (விதி 8(1)) சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்காக)

இப்பவும், இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு அமலாக்க சட்டம் 2002 ன் கீழான, IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிட்டெட் (முந்தைய கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெட், பிறகு IDFC பேங்க் லிமிட்டெட் - உடன் இணைக்கப்பட்டது) - ன் அதிகாரப்பூர்வ அலுவலராகவும், பிரிவு 13(12) - உடன் படிக்க - 'பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 விதிகள்-ன் விதி 3 ன் படியும் தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தை செயலுறுத்தி, கடன்தாரர், கூட்டு கடன்தாரர்கள் மற்றும் ஜாமின்தாரர்களான 1). பூவேந்திர சந்திரன் 2). சொர்ணாத்தாள் S ஆகியோருக்கு 15.02.2025 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை வழங்கியனழத்து, அதில் குறிப்பிட்டுள்ள 14.02.2025 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை **ரூ. 4,13,904.14/- (ரூபாய் நான்கு இலட்சத்து பதிமூன்றாயிரத்து தொள்ளாயிரத்து நான்கு மற்றும் பைசா பதினான்கு மட்டும்)** ஐ மேற்சொன்ன அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச்செலுத்தக் கோரினார்.

கடன்தாரர்கள் அத்தொகையை திருப்பிச் செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மேற்சொன்ன சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (4) - உடன் படிக்க - பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள்' 2002 ன் விதி 8 ன் படி தனக்குள்ள அதிகாரத்தை செயலுறுத்தி **2025 மே 21 ம் நாளன்று அடையாள சுவாதீனம்** எடுத்துள்ளார்.

குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இச்சொத்துடன் எந்தவொரு வில்லங்கமும் ஏற்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கப்படுவதுடன், அவ்வாறு ஏற்படுத்தப்படும் எந்தவிதமான வில்லங்கமும், தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் (முந்தைய கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெட், பிறகு IDFC பேங்க் லிமிடெட் - உடன் இணைக்கப்பட்டது) - க்கான கடன் பொறுப்பு **ரூ. 4,13,904.14/- (ரூபாய் நான்கு இலட்சத்து பதிமூன்றாயிரத்து தொள்ளாயிரத்து நான்கு மற்றும் பைசா பதினான்கு மட்டும்)** மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி, ஆகியவற்றுக்கு கட்டுப்பட்டது.

ஜாமின் சொத்துக்களை மீட்க உள்ள கால அவகாசம் தொடர்பாக மேற்சொன்ன சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (8) ன் கீழ் கடன்தாரரின் கவனம் வரவேற்கப்படுகிறது.

அசையா சொத்துக்களின் விபரம்

ஈரோடு பதிவு மாவட்டம், காங்கயம் சார்பதிவு மாவட்டம், காங்கயம் தாலுக்கா, குருக்கப்பாளையம் கிராமம், நத்தம் R S எண். 138/5 பகுதி, உட்பிரிவு படி நத்தம் புதிய சர்வே எண். 189/24 ல் அமையப்பெற்ற 0.0139 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய கட்டிடம் உள்ளிட்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இதன் **நான்கெல்லைகளாவன** – **கிழக்கு** - பொன்னுசாமி கவுண்டர் நிலங்கள், **மேற்கு** - தென்வடல் பொது தெரு, **வடக்கு** - நத்தம் புறம்போக்கு இடம், **தெற்கு** - கோவிந்தசாமி வீடு., **அளவிடுகளாவன** – தென்வடல் **மேற்கு புறம்** - 58-3/4 அடி., தெனவடல் **கிழக்கு புறம்** - 54 அடி., கிழமேல் **வடக்கு புறம்** - 28-1/2 அடி., கிழமேல் **தெற்கு புறம்** - 25 அடி.,

என மொத்தம் 1508 சதுர அடி (140.14 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்ட இடம் முழுவதும் மற்றும் அதனுடன் கூடிய ஒரு கட்டிடம் மற்றும் அதன் கதவுகள், அதில் பொருத்தப்பட்டவைகள், அறைகலன்கள் மற்றும் சாலைகள் மற்றும் பொது வசதிகளை பயன்படுத்தும் உரிமை. இச்சொத்து குருக்கப்பாளையம் கிராம பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ளது.

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்
IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்
(முந்தைய கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெட், பிறகு IDFC பேங்க் லிமிடெட் - உடன் இணைக்கப்பட்டது)

தேதி : 21.05.2025
இடம் : தமிழ்நாடு
கடன் கணக்கு எண் : 69665326

AMBIKA COTTON MILLS LIMITED
Regd. Office : 15/9A, Valluvar Street,
Sivanandha Colony, Coimbatore - 641 012.
CIN : L17115TZ1988PLC002269
Phone:0422-2491504, Fax:0422-2499623
website: www.acmills.in, email: ambika@acmills.in

STATEMENT OF AUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER /YEAR ENDED 31.03.2025
(Rs. In Lakhs,except per share data)

Particulars	Quarter Ended			Year Ended	
	31.03.2025	31.12.2024	31.03.2024	31.03.2025	31.03.2024
	(Audited)	(Unaudited)	(Audited)	(Audited)	
1. Total Income from Operations	14335	16257	20963	72858	84621
2. Operating Profit	3065	2876	3421	12983	13202
3. Finance Cost	331	347	513	1620	1907
4. Gross Profit	2734	2529	2908	11363	11295
5. Depreciation	555	568	723	2244	2770
6. Net profit/(Loss) for the period (before tax and exceptional items)	2179	1961	2185	9119	8525
7. Net profit/(Loss) for the period before tax (after exceptional items)	2179	1961	2185	9119	8525
8. Net profit/ (Loss) for the period after tax (after exceptional items)	1586	1428	1609	6574	6298
9. Other Comprehensive Income	-54	0	-66	-54	-66
10. Total Comprehensive income for the period (Comprising Profit / (Loss) for the period (after tax)	1532	1428	1543	6520	6232
11. Equity Share Capital	572.5	572.5	572.5	572.5	572.5
12. Reserves (excluding Revaluation Reserve) as per Audited Balance Sheet	-	-	-	89833	85317
13. Earnings Per Share (of Rs.10/- each) (for Continuing and discontinued operations)					
a) Basic	27.70	24.94	28.10	114.83	110.00
b) Diluted	27.70	24.94	28.10	114.83	110.00

Note : (a) The above is an extract of the detailed format of **Financial Result for the Quarter and year ended 31st March,2025** filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligation and Disclosure requirements) Regulations,2015. The full format of the **Audited Financial Results for the Quarter and year ended 31st March,2025** is available on the Company's website **(www.acmills.in)** and on the websites of BSE **(www.bseindia.com)** & NSE **(www.nseindia.com).** (b)The Board of Directors have recommended payment of Final dividend of Rs.37/- (370%) per equity share (face value of Rs.10 each) for **FY 2024-25** subject to approval of shareholders at the Annual general meeting.

Place : Coimbatore
Date : 27.05.2025

For Ambika Cotton Mills Limited
S/d
P.V.Chandran
Chairman & Managing Director
DIN:00628479